

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 13-05-2025

# உச்சநீதிமன்றத்தின் நெற்றியடி!

**“பி.எம்.ஸ்ரீ. திட்டத்தில் கையெழுத்துப் போடுங்கள் என்று தமிழ்நாடு அரசுக்கு உத்தரவிட முடியாது” என்று உச்சநீதிமன்றம் நெற்றியடி தீர்ப்பை வழங்கி இருக்கிறது.**

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞர் ஜி.எஸ்.மணி என்பவர் உச்சநீதி மன்றத்தில் ஒரு பொதுநல வழக்கை தாக்கல் செய்திருந்தார். “நாட்டின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஒன்றிய அரசு தேசியக் கல்விக் கொள்கையை உருவாக்கி இருக்கிறது. அந்தத் திட்டத்தின் கீழ் இந்தியா முழுமைக்கும் 14 ஆயிரம் பள்ளிகளை மேம்படுத்தப் போகிறார்கள். இந்த ஒப்பந்தத்தில் தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்கள் இணையவில்லை. அவர்கள் ஒன்றிய அரசின் ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட மறுக்கிறார்கள். புதிய கல்விக் கொள்கையானது தமிழ் மொழிக்கும், தமிழர் நலனுக்கும் எதிரானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இது உண்மைக்கு மாறானது. அரசியல் உள்நோக்கம் கொண்டது. எனவே, தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் ஆகிய மூன்று மாநிலங்களையும் இத்திட்டத்தில் கையெழுத்துப் போட உச்சநீதிமன்றம் உத்தரவிட வேண்டும்” என்று அந்த மனுவில் கேட்டிருந்தார் பா.ஜ.க. வழக்கறிஞர்.

இந்த வழக்கானது உச்சநீதிமன்ற நீதிபதிகள் பார்த்திவாலா, ஆர்.மகாதேவன் அமர்வு முன்னால் விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுத்திருப்பவரை யார் என்று நீதிபதிகள் கேட்டார்கள். ‘நான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவன்’ என்றும், ‘டெல்லியில் வசிக்கிறேன்’ என்றும் அவர் சொன்னார். “டெல்லியில் தானே வசிக்கிறீர்கள், உங்களுக்கு இந்தி கற்றுக் கொள்ள எந்தத் தடையும் இல்லையே, டெல்லியில் இருந்து இந்தியை தாராளமாகக் கற்றுக் கொள்ளுங்கள்” என்று நீதிபதிகள் அறிவுரை சொன்னார்கள்.

**“மாநிலங்கள், தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா? என்பது மிகவும் சிக்கலான விவகாரம் ஆகும். நாட்டு மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி நிலைநாட்ட முடியும். ஆனால், தேசியக் கல்விக் கொள்கை போன்றவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் போது அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால் அதில் உச்சநீதிமன்றம் தலையிட முடியும். எனவே உங்கள் மனுவில் உள்ள கோரிக்கைகளை விசாரணை நடத்த விரும்பவில்லை”** என்று சொல்லி பா.ஜ.க. வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவைத் தள்ளுபடி செய்துள்ளார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துங்கள் என்று மாநிலங்களுக்கு உத்தரவிட முடியாது என்று சொன்னது மட்டுமல்ல; தேசியக் கல்விக் கொள்கையானது அடிப்படை உரிமைகளை பாதித்தால் அப்போது தலையிடுவதாகவும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

தேசியக் கல்விக் கொள்கையானது, மாநிலத்தின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகவே அமைந்துள்ளது. பி.எம்.ஸ்ரீ. திட்டத்தில் தமிழ்நாடு சேரவில்லை என்பதற்காக, பள்ளிக் கல்வியின் வேறொரு திட்டத்துக்காக வழங்க வேண்டிய ரூ.2000 கோடி பணத்தை நிறுத்தி வைத்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

பள்ளிக் கல்வித் துறைக்கு தரும் நிதியை, ‘மும்மொழித் திட்டத்தை ஏற்காவிட்டால் தர மாட்டோம்’ என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார். **“பி.எம்.ஸ்ரீ. திட்டத்தை ஏற்காததால் தமிழ்நாடு 2 ஆயிரம் கோடி ரூபாய் இழக்கிறது என்று சொல்லும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே! தமிழ்நாட்டில் இருந்து நீங்கள் வாங்கிக் கொண்டு இருக்கும் வரியைத் தர மாட்டோம் என்று சொல்ல எங்களுக்கு ஒரு நொடி போதும்… மறந்துவிடாதீர்கள்”** என்று எச்சரிக்கை செய்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“இந்தத் திட்டத்தில் கையெழுத்துப் போட்டால்தான் இரண்டாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும்பத்தாயிரம் கோடி பணம் கிடைக்கும் என்றாலும் போட மாட்டோம். இரண்டாயிரம் கோடி பணத்துக்காக இன்று கையெழுத்துப் போட்டால் இரண்டாயிரம் ஆண்டு பின்னோக்கி இந்த தமிழ்ச் சமுதாயம் போய்விடும்.அந்தப் பாவத்தை இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்ய மாட்டான்”** என்று சொன்னார். இந்தியாவில் இப்படி எந்த முதலமைச்சரும் பேசி இருக்க மாட்டார்கள். இப்படி பிளாக் மெயில் செய்யவே இதுபோன்ற திட்டங்களைப் பயன்படுத்துகிறது ஒன்றிய அரசு.

அவர்களுக்கு இந்தியைத் திணிக்க வேண்டும், சமஸ்கிருதத்தை புகுத்த வேண்டும். அதற்காகத்தான் தேசியக் கல்விக் கொள்கை, பி.எம்.ஸ்ரீ. பள்ளிகள் என்று பல்வேறு வித்தைகளைக் காட்டுகிறார்கள்.

‘புதிய கல்விக் கொள்கையானது தமிழுக்கும் தமிழர்க்கும் விரோதமானது என்று தமிழ்நாடு முதலமைச்சர் சொல்வது உண்மைக்கு மாறானது, அரசியல் உள் நோக்கம் கொண்டது’ என்று வழக்கு தாக்கல் செய்பவர் சொல்லி இருக்கிறார். உள்துறை அமைச்சர் அமித்ஷா பேசிய பேச்சை அந்த வழக்கறிஞர் படிக்க வேண்டும். “தேசியக் கல்விக் கொள்கையானது சமஸ்கிருதத்தை முக்கியத் தூணாகக் கொண்ட இந்திய அறிவு முறைக்கு வலுவான முக்கியத்துவம் அளிக்கிறது” என்று பேசி இருக்கிறார். இதை வைத்துத்தான் தமிழுக்கும், தமிழர்க்கும் எதிரானது தேசியக் கல்விக் கொள்கை என்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

முதலில் இந்தி, அதன்பிறகு சமஸ்கிருதம், இவைதான் ஆட்சி மொழி ஆக வேண்டும் என்று சொல்வது ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கொள்கை. அதனைத்தான் தேசியக் கல்விக் கொள்கை மூலமாக அமல்படுத்தப் பார்க்கிறார்கள்.

**அதனால்தான், ‘இது கல்விக் கொள்கையல்ல, காவிக் கொள்கை’ என்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இதனை உச்சநீதிமன்றத்தின் மூலமாக நுழைக்கப் பார்த்தார்கள். அதுவும் நடக்கவில்லை.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு இதழ் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலையை திறந்து வைத்து, அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள புகைப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா. - பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

## திருவாரூரில் “கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்”!

### அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருவாரூர், மே 13 -

தமிழ்நாடு முதலமைச்சர், திராவிட நாயாகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடனும் , திருவாரூர் நகராட்சி வார்டு எண்.25 பழைய தஞ்சை சாலையில் ரூ.13.27 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ‘கலைஞர் நூற்றாண்டு காய், கனி அங்காடி வளாகம்’ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச்சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தெரிவித்ததாவது :-

“திருவாரூர் என்பது எங்களையெல்லாம் உருவாக்கிய முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் பிறந்த மண். திருவாரூர் மாவட்டத்திற்கு தேவையான அனைத்து வசதிகளையும் உடனுக்குடன் செய்து தந்தவர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் வழியில் செயல்படும் தற்பொழுதுள்ள முதலமைச்சர் அவர்கள் மக்கள் நலனுக்கான பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள்.

நான்காண்டில், திருவாரூர் மாவட்டத்தில், நகராட்சி நிர்வாகத்துறையின் சார்பில், நகர்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.12.90 கோடி மதிப்பீட்டில் 18 பணிகளும், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.54 லட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளும், தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேமம்பாட்டு திட்டத்தின் கீழ் 43 பணிகள் (10.142 கி.மீ,) ரூ.10 கோடி மதிப்பீட்டிலும், நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (10.027 கி.மீ.) 37 பணிகள் ரூ.4.35 கோடி மதிப்பீட்டிலும், 15வது நிதிக்குழு மானியம் திட்ட த்தின் கீழ் 57 பணிகள் ரூ.9.30 கோடி மதிப்பீட்டிலும், மாநில நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் 2 பணிகள் ரூ.66 லட்சம் மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 3 பணிகள் ரூ.2.21 கோடி மதிப்பீட்டிலும், இயக்குதல் மற்றும் பராமரித்தல் நிதியின் கீழ் 4 பணிகள் ரூ.0.17 கோடி மதிப்பீட்டிலும், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2 பணிகள் ரூ.1.85 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில், 7 பணிகளும் முடிவுற்றுள்ளது.

அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.78.15 கோடி மதிப்பீட்டிலும், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 8 பணிகள் ரூ.24.16 கோடி மதிப்பீட்டிலும், மூலதன மானிய நிதியின் கீழ் 1 பணி ரூ.4.06 கோடி மதிப்பீட்டிலும், பாதாளச்சாக்கடை திட்டத்தின் கீழ் 1 பணி ரூ.29.46 கோடி மதிப்பீட்டிலும், தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 பணிகள் ரூ.1.99 கோடி மதிப்பீட்டிலும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும், 2025-2026ஆம் நிதி ஆண்டிற்கு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2025-2026இன் கீழ் நகராட்சிக்குட்பட்ட 86 எண்ணிக்கை சாலைகளை ரூ.8.17 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளது. கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் 2025-2026இன் கீழ் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் குளங்கள் மேம்பாடு, ரூ.0.77 கோடி மதிப்பீட்டில் பூங்கா மேம்பாடு, ரூ.5.30 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலைய மேம்பாடு மற்றும் ரூ.1.77 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெறவுள்ளது. திருவாரூர் நகராட்சிக்கு மட்டுமின்றி, மன்னார்குடி நகராட்சியிலும் நகராட்சி நிர்வாகது துறையின் சார்பில் பல்வேறு பணிகள் நடைபெற்றுவருகிறது” என நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தெரிவித்தார்.

தொடர்ந்து, திருவாரூர் நகராட்சியில் ரூ.16.30 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் பழைய பேருந்து நிலைய மேம்பாடு பணிகளை நகரா ட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பார்வையிட்டார்.

அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, வை.செல்வராஜ் எம்பி., மாவட்ட ஆட்சித்தலைவர் வ.மோகனச்சந்திரன், மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி. பாலு, ஒன்றியக்குழு முன்னாள் தலைவர் புலிவலம் ஏ.தேவா, நகர்மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத்தலைவர் அகிலா சந்திரசேகர் நகர செயலாளர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், நகர்மன்ற தலைவர்கள் கவிதா பாண்டியன், பாத்திமா பஷீரா, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். எஸ்.பாண்டியன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள் உடனிருந்தனர்.

### அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை

## அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு கண்டனம்!

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!
### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி அறிவிப்பு!

புதுக்கோட்டை, மே 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் 7.5.2025 - புதன்கிழமை காலை 11.30 மணியளவில புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் நடைபெற்றது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர் - இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அனைவரையும் வரவேற்று ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.



புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமை வகித்தார். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வுகளில் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த. சந்திரசேகரன், தீர்மானக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.ராமநாதன், தேர்தல் பணிக் குழுச் செயலாளர் பரணி இ.ஏ.கார்த்திகேயன மாவட்ட துணைச் செயலளார்கள் ஞான.இளங்கோவன், க. அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாத்துரை, மாவட்டப் பொருளாளர் ஜெ.அபுதாஹீர், இரா.ஆனந்த், ஆர்.ஆர். கே.கலைமணி, உதயம் சண்முகம், பொன்.ராமலிங்கம், சக்தி ராமசாமி, பொன்.கணேசன், கே.பி.கே.டி.தங்கமணி, அ.அடைக்கலமணி, அ. முத்து, எஸ்.எம்.சீனியார், அரு.வடிவேல், கே.எஸ்.ரவி, எல். குமார் (எ) துரைக்கண்ணு, வி.ஆர்.இளையராஜா, க. ராஜேந்திரன், த.மணிராஜன், ஆர்.வி.செல்வம், கே.எம். சுப்பிரமணியம், கலைவாணி சுப்பிரமணியன், உஷா செல்வம், அ.அழகப்பன், கே.சி. சிவகுமார், நாசர் (எ)செந்தில் குமார், ஆ.பழனிக்குமார், எஸ்.எம்.குமரேசன், கன்சூல் மகரியா, ஆ.கலைச்செல்வன், இரா.மேகநாதன், கே.ஆர். ராமசாமி, மணிகண்டன், பொன்.லோக நாதன், டி. வளர்மதி, சிவ குமார், சக்தி வேல், ஹரி விமலாதி, எம். ஜி.(எ) ராமச்சந்திரன் நடேசன், கருணாகரன், அப்துல் ஹமீது, பாத்திமா பீவி, தேவி, இரா.தமிழ்ராசு, நசுருதீன், மேகலா முத்து, திருமயம் ராஜன், ராஜ பெரியண்ணன், ஆர்.எம்.கே.கார்த்திக், அற்புத ஹென்றி, மற்றும் மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட துணைச் செயலாளர் அடைக்கலம் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

திராவிட மாடல் அரசின் 5ஆம் ஆண்டு அடி எடுத்து வைக்கும் மக்களின் மகத்தான பேரன்பை பெற்ற இந்தியாவிற்கே ரோல்மாடலாக செயல்படும் கழக தலைவர் மற்றும் முதல்வர் அவர்கள் 5வது ஆண்டில் அவரது பணி சிறப்பாக தொடர்ந்திடவும் 7வது முறையாக கழக ஆட்சியையும் 2வது முறையாக தலைவர் தளபதி அவர்கள் தமிழக முதலமைச்சராக பணியாற்ற மாவட்டக் கழகம் இன்று முதல் தேர்தல் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதென தீர்மானிக்கப்படுகிறது.

ஜூன் 3 தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழாவை ஏழை எளியோர் சமுதாயத்தில் நசுக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு உணர்வுகளுக்கு குரல் கொடுக்கிற நாளாக சமத்துவம், சகோதரத்துவம், சமநீதி ஆகிய லட்சியங்களை உள்ளடக்கிய தலைவர் தளபதி அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் கொள்கைகளை, சாதனைகளை விளக்கும் நிகழ்சியாக ஏற்பாடு செய்து மக்கள் பயனடையும் வகையில் கொண்டாடுவது என தீர்மானிக்கப் படுகிறது.

நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு என தலைமை கழகத்தின் அறிவிப்பின்படி கழக ஆட்சியின் சாதனை விளக்க பொதுகூட்டம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் 17 இடங்களில் மே 8ம் தேதி முதல் 13ம் தேதி வரை சிறப்புடன் கூட்டத்தை நடத்தி நலத்திட்ட உதவிகள் வழங்குவதென தீர்மானிக்கப்படுகிறது.

அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்கு பயன்படுத்தும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் அதிகார அத்துமீறலை இந்த மாவட்ட கழகம் வன்மையாகக் கண்டிப்பதோடு மக்கள் மன்றத்திலும் சட்டத்தின் துணை கொண்டும் திமுக எதிர்கொள்ளும் என தலைவர் தளபதி வாதத்திற்கு வலு சேர்க்கும் வகையில் சிறப்போடு பணியாற்றுவது என உறுதி ஏற்கப்படுகிறது.



விழுப்புரத்தில் தேசிய திருநங்கைகள் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற மிஸ்கூவாகம்2025. நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். மாவட்ட ஆட்சியர் ஷேக்அப்துல்ரஹ்மான், மாவட்டக் கழக பொருளாளர் இரா.ஜனகராஜ், திரைப்பட நடிகர் விஷால் மற்றும் திருநங்கைகள் கூட்டமைப்பினர் பலர் கலந்து கொண்டனர்.